1978 மார்ச் 18]

கொடுக்கப்படுவதில்லை. அப்படி வசூல் செய்து செய்யக்கூடிய கட்டட அபிவிருத்தியோ அல்லது வாங்கக்கூடிய பொருள்களோ அவையெல்லாம் அந்தத் தனியார் துறை நிர்வாகத்தினர் பேரில் தானே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவற்றையெல்லாம் பொதுச்சொத்தில் கொண்டு வருவதற்கான ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர அவர்களே, குறிப்பிட்ட பள்ளிகளில் இப்படி ஏதாவது நடைபெற்றிருக்குமானால் அதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தகவல் தந்தால் அரசு அதுபற்றி விசாரிக்க உத்தரவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரபி மொழி.

*வினா 609—திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் அரசு கல்லூரிகளில் அரபி மொழி (Arabic Language) போதிக்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

(அ) தமிழ்நாட்டில் அரசு கல்லூரிகளில் நந்தனம் ஆண்கள் கலைக் கல்லூரியில் அரபி மொழி (Part I of P.U.C. Degree) பயிற்றுவிக்கப்படுகிறது.

(ஆ) அதன் விபரங்கள் கீழ்வருமாறு :

நந்தனம் ஆடவர் கலைக் கல்லூரியில் இவ்வாண்டு (1977–78) அரபி மொழி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை.

பி.யூசி.	4
பட்ட வகுப்பு	5
மொத்தம்	9

மாலைக் கல்லூரி—

புகுமுக வகுப்பு	2
பட்ட வகுப்பு	1
மொத்தம்	3

அரபி மொழி பயிற்றுவிப்பதற்காக அக்கல்லூரியில் இரு அரபி உதவிப் பேராசிரியர்கள் உள்ளனர். இவர்களில் ஒருவர் உருதும் போதிக்கத் தகுதி படைத்தவராதலால் உருதுமொழி போதிப்பதற்காகவும் அவருடைய பணி பயன்படுத்தப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[1978 மார்ச் 18

திரு. யா.சை.மு. யூசுப்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் உயர் கல்வியைப் பற்றிச் சொன்னார்கள். ஆனால் அடிப்படைக் கல்விக்கே தகுந்த வழிவகைகள் செய்து தரப்படவில்லை. குறிப்பாக, அரபி மொழி ஒரு பழமை வாய்ந்த மொழி. அத்துடன் ஒரு சமுதாயத்தினர் தங்களுடைய வேத நூலை ஓதுவதற்குப் படிக்கின்ற ஒரு மொழியாகும். எனவே, கீழ் மட்டத்திலே ஆங்காங்கே உள்ள கிராமங்களிலே இந்த மொழியை போதிப்பவர்களுக்கு ஏதாவது உதவித் தொகை தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, உதவித் தொகை தருவதற்கான ஏற்பாடு எதுவுமில்லை. ஆனால் அப்படிப்பட்டவர்களது தொகைக்கேற்ப வசூல் செய்துகொள்வதற்கான முயற்சிகளைப் பற்றி பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. ஆறுமுகம்: பேரவைத் தலைவரவர்களே, சேலம் மாவட்டத்தில் என்ஜினீயரிங் கல்லூரிக்கு அருகாமையில் அரபிக் கல்லூரி ஒன்று இஸ்லாமிய மதத்தினரால் நடத்தப்பட்டு வருகிறது. அப்படி தனியார் துறையில் நடைபெறக்கூடிய கல்லூரிக்கு அரசு மானியம் வழங்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அரசு விதிகளுக்கு உட்பட்டு அது வருமேயானால் கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறிய விளக்கத்திலிருந்து நந்தனம் கலைக் கல்லூரியில் 20-க்கும் குறைவான மாணவர்கள்தான் அரபி மொழியைப் பயிலுகிறார்கள் என்பதும் அவர்களைப் பயிற்றுவிப்பதற்கு இரண்டு ஆசிரியர்கள் தான் அங்கே பணியாற்றுகிறார்கள் என்பதும் தெரிய வந்தது. இப்படி இருபது மாணவர்களுக்கு இரண்டு ஆசிரியர்கள் என்பது அதிகச் செலவாகாதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, இது சிறுபான்மையினரின் நலன் கருதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. உறுப்பினர் கூறிய அந்த அடிப்படையிலே அணுகவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புளலாம்பட்டியில் பழங்காலச் சின்னங்கள்.

*வினா 610— திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை மாவட்டம், புளலாம்பட்டி கிராமத்தில் பழங்காலச் சின்னங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?